இதுவரை ரூ.6 கோடியே 59 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 59 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 12-11-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	கு. செல்லையா, மாயமான்குறிச்சி, ஆலங்குளம், தென்காசி மாவட்டம்.	25,000/–
2.	பொ.தங்கராஜ், முக்காணி, ஏரல், திருவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம்.	25,000/–
3.	என்.சண்முகம், ஆஸ்ராமம், சுசீந்திரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.	25,000/–
4.	கே.நிஷார், நெ.8, 4வது தெரு, ஆயிரம்விளக்கு, சென்னை – 6	25,000/–
5.	இருதயமேரி, சி.கே.எஸ்பிளாட், புதுத்தெரு, சாந்தோம், சென்னை – 4	25,000/–
6.	பி.வெங்கடேசன்,மேல்நல்லாத்தூர் அஞ்சல், கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்	25,000/–
7.	சௌ.ஆரோக்கியராசு, கஸ்தூரிபாய் நகர், அனகாபுத்தூர், சென்னை – 70.	25,000/–
8.	ஏ.இ.என்.நாகராஜ், வி.எம்.டி.என்கிளவ், கங்காபுரம், ஆம்பூர், திருப்பத்தூர்	25,000/–
	மொத்தம்	**ரூ.2,00,000/-**



கழக இளைஞர் அணி மண்டலம் 3-க்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (12.11.2026) வாணியம்பாடியில் துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கழக இளைஞர் அணிச் செயலாளர் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 50-வது பிறந்தநாள் விழாவை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் கொண்டாடுவது குறித்தும், எதிர் வரவுள்ள இடைத்தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க. தேவராஜி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் மற்றும் அனைத்து மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு பகுதி இன்று உருவாகிறது !

சென்னை,நவ.13-

வங்கக்கடலில் வெள்ளிக்கிழமை இன்று (நவ. 13) காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவாக வாய்ப்புள்ளதால் சென்னை உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில்,

சுமார் 5.8 கிமீ உயரம் வரை தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது இதன் காரணமாக வரும் நவம்பர் 13 ஆம் தேதி தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 14 ஆம் தேதி வாக்கில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாகவும், நவம்பர் 15 ஆம் தேதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெறக்கூடும்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (13-11-2026 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தின் கலைஞர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் முதலானோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கினார். உடன் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

சேலம் மாவட்டம் முழுவதும்

த.வெ.க. ஆட்சியில் கஞ்சா, குட்கா விற்பனை அதிகரிப்பு!

கண்டுகொள்ளாத காவல்துறை!

சேலம், நவ.13-

சேலம் மாவட்டம் முழுவதும் த.வெ.க. ஆட்சியில் கஞ்சா குட்கா போதை மாத்திரை விற்பது அதிகரிப்பு. சேலம் மாவட்டம் ஓமலூர் காமண்டபட்டி ரயில்வே பாலத்திற்கு கீழ் கல்லூரி மாணவர்களுக்கு கஞ்சா. விற்பனை செய்து வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது இதையொட்டி சப் இன்ஸ்பெக்டர் கணேஷ் குமார் மாறுவேடத்தில் அங்கு சென்றார் ஒரு வாலிபர் மாணவர்களுக்கு சிறிய பொட்டலங்களை விற்றுக் கொண்டிருந்தார். கணேஷ் குமார் அந்த வாலிபரிடம் சென்று தனக்கு ஒரு பொட்டலம் தேவையென்று கேட்டார் அந்த வாலிபர் ஒரு பொட்டலம் ரூ. 800 என்று கூறினார். உடனே அந்த வாலிபரை கஞ்சா பொட்டலத்துடன் பிடித்து விசாரனை செய்ததில் அதே பகுதியை சேர்ந்த பாரத் (வயது 25) என்று தெரிந்தது. இவருடைய வீட்டை சோதித்ததில் 50 க்கும் மேற்பட்ட கஞ்சா பொட்டலங்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதையொட்டி கைது செய்யப்பட்டார்

அதே பகுதியில் முருகேசன் (வயது 54) என்பவர் வீட்டை சோதனை செய்ததில் மூட்டையில் குட்கா இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது அவரும் கைது செய்யப் பட்டார்.

சேலம் மாநகரம் பொன்னமாபேட்டை பகுதியில் போதை மாத்திரை விற்பணை செய்வதாக அம்மா பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் சதீஷ் குமாருக்கு தகவல் கிடைத்தும் அவர் அந்த பகுதிக்கு சென்ற போது 4 பேர் சந்தேகப்படும் வகையில் நின்றிருந்த வர்களிடம் சோதனை செய்ததில் 4 பேரிடமும் 300 க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் பறிமுதல் செய்து விசாரித்ததில் ஜீவானந்தம்,

கிஷோர்குமார், முகமது சந்தோஷ் என்று தெரிய வந்தது. இதே போல சேலம் இரும்பாலை அருகே போலீசார் ரோந்து பணியில் இருந்த போது ஒரு வாலிபரை பிடித்து விசாரித்த போது போதை மாத்திரை 51 பிடிப்பட்டது. அதே சமயம் போதை மருந்து சிரிஞ்ச் ஆகியவை கைப்பற்றி கைது செய்து விசாரித் தில் தீபக் சரண் (வயது 24) என்று தெரிய வந்தது. இவர்கள் அனைவரையும் கைது செய்தனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்டால், தமிழ்நாட்டில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாட வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறதே. முன்னெச்சரிக்கையா த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா?

போண்டி : ஆமாய்யா; தென்மேற்குப் பருவமழையாலே மூணில் ஒரு பங்குதான் தண்ணீர் இருக்குதாம். ஏற்கனவே கர்நாடகா தண்ணீர் தர முடியாதுன்னு சொல்லிடுச்சி. விஜய் கோயிலுக்கு போனபோது அப்படியே ஆந்திரா முதலமைச்சரிடம் பேசியதா தகவல். அவர்களாவது தருவாங்களான்னு தெரியலே. த.வெ.க. அரசு என்ன செய்யப்போதோ தெரியல. பார்ப்போம் என்ன நடக்குதுன்னு.

84வது வட்டக் கழக முன்னாள் செயலாளர்

திருவல்லிக்கேணி கே.ராஜீ மறைவு!

கழகத்தினர் மலரஞ்சலி!



சென்னை, நவ. 13 -

சேப்பாக்கம் பகுதி. 84வது வட்டக் கழக முன்னாள் செயலாளர் கே.ராஜீ நேற்று (12.11.2026 -வியாழக்கிழமை) 12 மணிக்கு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கே.ராஜீ அவர்கள் 1984. வட்டக் கழக செயலாளர் (84 வட்டம்).

1989 முதல் மாவட்ட பிரதிநிதி.

2001-2006 .80 வது வார்டு மாமன்ற உறுப்பினர் .

2016 முதல் இன்று வரை. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை மற்றும் இணை அமைப்பாளர் பொறுப்பில் இருக்கின்றார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பெற்றவர். தள்ளாத வயதிலும் கழகம் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டவர்.

மறைந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அ.தி.மு.க.வுக்கு சென்ற பொழுது இவரை அழைத்தார். இவரை அச்சரப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினராக ஆக்குகிறேன் என்ற பொழுதும் நான் கழகத்தை விட்டும் கலைஞரை விட்டும் வரமாட்டேன் என்று உறுதியோடு நின்றவர் என்று குறிப்பிடத்தக்கது.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (13.11.2026) பிற்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு கிருஷ்ணாம் பேட்டை இடுக்காட்டில் இறுதி சடங்குகள் நடைபெறுகின்றன.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.கே. கோட்டையப்பன்

நவம்பர் 13 (1996)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிவந்திப்பட்டி பஞ்சாயத்துத் தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்" என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.